செ. கு. எண்:112

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.5.2013

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், சிறுவாடி கிராமம் அருகே 4.5.2013 அன்று சென்று கொண்டிருந்த லாரியின் மீது சில விஷமிகள் கல் எறிந்து தாக்கியதில், வாகனத்தின் முன்பக்க கண்ணாடி உடைந்து, மரக்காணத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் திரு. பன்னீர்செல்வம் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பன்னீர்செல்வம் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கொடூர தாக்குதரிலல் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும்நடவடிக்கை எடுக்கும்படி நான் காவல் துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த பன்னீர்செல்வம் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**